06.02.2026.
O.S.No. 196/2019

வா. சா. 1 சின்னப்பொண்ணு அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

என் அம்மா பெயர் காளியம்மாள். காளியம்மாளின் கணவர் பெயர் வைரம்பிள்ளை. வைரபிள்ளைக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி காளியம்மாள். 2வது மனைவி பெயர் முத்துக்கண்ணு. பெரியக்காள் என்பவர் எனது அக்கா. பெரியக்காளின் கணவர் பெயர் தங்கராஜ். தங்கராஜூக்கு இரண்டு மனைவிகள். மூத்தமனைவி பெரியக்காள். இளையமனைவி பழனியம்மாள். தங்கராஜின் அப்பா பெயர் மருதநாயகம். அவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி காளியம்மாள் என்றும் 2வது மனைவி பெயர் வெள்ளையம்மாள் என்றும் சொன்னால் அதுபற்றி தெரியாது. மேற்படி தங்கராஜின் மகன்தான் 1ம் பிரதிவாதி திருவேங்கடம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சங்கீதா 1ம் பிரதிவாதி திருவேங்கடத்தின் மனைவி என்றால் சரிதான். என் தாயார் காளியம்மாள் எப்போது இறந்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை. என் தாயார் காளியம்மாள் 2016ல் காலமானார் என்றால் எனக்குத் தெரியவில்லை. என் அம்மா காளியம்மாளுக்கு ஒரு பாகம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 10.10.1974ல் வாதசாஆ.2 வின்படி என் அம்மாவிற்கு ஒரு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாயார் 1ம் பிரதிவாதியுடன் அவர் இறக்கும்வரை இருந்து வந்தார் என்றால் இல்லை. என் தாயாரை நானும் என் சகோதரியும் கவனிக்கவில்லை என்றும் 1ம் பிரதிவாதிதான் இறுதிகாலம்வரை கவனித்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்

அம்மாவை கவனித்து வந்ததால் 26.7,2012ம் தேதி 1ம் பிரதிவாதி பெயருக்கு உயில் ஒன்றை என் அம்மா எழுதி வைத்தார் என்றால் இல்லை. என் அம்மா 1ம் பிரதிவாதியுடன் ஒரே குடும்பமாக இருந்து வந்தார் என்பதற்கு குடும்ப அட்டை ஆதார் அட்டை எல்லாம் உள்ளது என்றால் என் அம்மா எங்களுடன்தான் இருந்து வந்தது. என் அம்மா இறுதிவரை எங்களுடன் தான் இருந்து வந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஏற்கனவே கொடுத்துள்ளேன். என் சகோதரி பெரியக்காள் பெயருக்கு 1ம் பிரதிவாதியின் தந்தை தங்கராஜ் 30.07.1991ம் தேதி 2 ஏக்கரை தானசெட்டில்மெண்ட்டாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதே சொத்துக்களை 12.06.1995ம் தேதி மாரியப்பன் என்பவருக்கு கிரையம் ஏற்படுத்திக்கொடுத்து அந்த பணத்தை நானும் என் அக்காவும் வைத்துக்கொண்டோம் என்றால் கடனை கட்டிவிட்டோம். அந்த சமயத்தில் 1ம் வாதி பெரியக்காள் 30.07.1991ம் தேதி வழக்குச் சொத்துக்களைப்பொறுத்து பாகம் வேண்டாம் என விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. மேற்படி தேதியிலிருந்து தாவாச்சொத்துக்களில் உள்ள உரிமையை நானும் என் சகோதரியும் விலக்களித்துவிட்டோம் என்றால் சரியல்ல. என் தாயார் இறந்ததற்கு நானும் என் அக்காவும் போகவேயில்லை என்றும், 1ம் பிரதிவாதிதான் இறுதி காரியத்தை முடித்தார் என்றும் சொன்னால் சரியல்ல. என் அம்மா அவர் தனியாக இருந்த வீட்டில் வைத்துத்தான் இறந்தார். என் அம்மா இறந்த பின்னர் தாவாச்சொத்துக்களில் நானும் என் சகோதரியும் சேர்ந்து பிரச்சனை செய்ததால் 1ம் பிரதிவாதி வேடசந்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அவ.எண்.12/2012 வழக்கு

தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு 7.8.2018ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் எங்களுக்கு படிப்பறிவு இல்லாததால் அந்த வழக்கில் ஆஜராகாமல் இருந்துவிட்டோம். 1ம் வாதி பெரியக்காள் அவரது கணவர் தங்கராஜ் மற்றும் அவரது சகோதரர்களுக்கு எதிராக டிவிஓபி.எண்.5/2012 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதன் பின்னர் வழக்குச்சொத்தை வில்லங்கப்படுத்தவேண்டும் என்பதற்காக 7.6.2012 ம்தேதி ஒரு ஈடுபத்திரத்தை (வாதசாஆ.10) எங்களது உறவினர் இளையராஜா என்பவருக்கு எழுதிவைத்தோம் என்றால் ஈடு வைத்தோம். வில்லங்கம் செய்ய வேண்டுமென வைக்கவில்லை. மீண்டும் அந்த ஈடுபத்திரத்தை 18.01.2019ம் தேதி வாதசாஆ.11 செல்ரசீது வைத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பணத்தை 1ம் பிரதிவாதி செலுத்தித்தான் செல்ரசீது பெறப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள்தான் செல்ரசீது வைத்தோம். 1ம் பிரதிவாதி பெயரில் உயில் சாசனம் இருந்ததாலும், அவரிடம் என் தாயாரின் இறப்பு சான்றிதழ் இருந்ததாலும் என் தாயார் இறப்புக்கு பின்னர் 1ம் பிரதிவாதி பெயருக்கு சொத்துக்களின் பட்டாவை மாற்றி உள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் உயில் சாசனத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படம் என் அம்மா காளியம்மாளுடையது. 12.03.2014ம் தேதி என் தாயார் இறந்தார் என்பதற்காக இறப்பை 1ம் பிரதிவாதி பதிந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவாச்சொத்துக்களுக்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் 1991ம் வருடத்திலேயே சொத்துக்களை விட்டு நாங்கள் விலகிவிட்டோம் என்றும் அதன் பின்னர் 1ம் பிரதிவாதி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து அவருக்கு சாதகமாக தீர்ப்பாகி

உள்ளது என்றும் நாங்கள் பொய்யான விவரங்களைக்கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்க்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.06 17:28:51 +0530

Principal District Judge,
Dindigul.